அறிவுமுகமாக தடம் பதித்தவர் முரசொலி மாறன்

முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்

சென்னை, நவ.24: முரசொலி மாறன் நினைவு நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில் கூறியிருப்பதாவது:

அறிவுத் திருவிழா எடுத்த நம் இயக்கத்தின் அறிவுமுகமாக டெல்லியிலும் தோகா மாநாட்டிலும் தடம் பதித்தவர் முரசொலி மாறன். கலைஞரின் மனசாட்சியாகவும், கழகம் கடந்து வந்த நெருப்பாறுகளின் வரலாற்று சாட்சியாகவும் நிலைபெற்ற முரசொலி மாறன் நினைவு நாளில் அவரது பணிகளைப் போற்றி வணங்குகிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

அடர்ந்த மரம்... அழகு சாலை...

► சென்னையில் நேற்று வெயில் இல்லாமல் இதமான சூழல் நிலவியது. தரமணி காழிகுன்றம் சிபிடி வளாகம் சாலையில் அடர்மரங்கள் சூழ்ந்து அழகூட்டுகிறது.

சட்டப்பேரவை தேர்தல்

காங்கிரசுக்கு செல்வாக்கு உள்ள தொகுதிகள் எவை?

தொகுதி பங்கீட்டு குழு ஆலோசனை

சென்னை, நவ.24: சட்டப்பேரவை தேர்தல் தொடர்பாக காங்கிரஸ் தொகுதி பங்கீட்டு குழு சென்னையில் நேற்று ஆலோசனை நடத்தியது.

தமிழகத்தில் திமுக தலைமையிலான அணியில் காங்கிரஸ் இடம் பெற்றுள்ளது. வரும் சட்டப்பேரவை தேர்தலில் திமுகவுடன் தொகுதி பங்கீடு உள்ளிட்ட பேச்சுவார்த்தைகளை நடத்த காங்கிரஸ் கட்சி 5 பேர் குழுவை நேற்று முன்தினம் அறிவித்தது. தமிழக காங்கிரஸ் மேலிட பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் தலைமையிலான குழுவில், தமிழக தலைவர் செல்வப்பெருந்தகை, அகில இந்திய செயலாளர்கள் சூரஜ் ஹெக்டே, நிவேதித் ஆல்வா, சட்டப்பேரவை காங்கிரஸ் தலைவர் ராஜேஷ்குமார் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இந்த குழு நேற்று சென்னையில் உள்ள காங்கிரஸ் தலைமை அலுவலகமான சத்திய மூர்த்தி பவனில் ஆலோசனை நடத்தியது. கிரிஷ் சோடங்கர் தலைமையில் இந்த ஆலோசனை கூட்டம் நடந்தது. இதில் செல்வபெருந்தகை, ராஜேஷ்குமார் உள்ளிட்ட தொகுதி பங்கீட்டு குழுவினர் கலந்து கொண்டனர். இந்த குழுவினர் வரும் சட்டப்பேரவை தேர்தல் தொடர்பாக ஆலோசனை நடத்தினர். எந்தெந்த தொகுதிகளில் காங்கிரஸ் கட்சிக்கு செல்வாக்கு உள்ளது என்பது குறித்து தீவிர ஆலோசனை நடத்தப்பட்டது. மேலும் திமுகவிடம் எத்தனை தொகுதிகளை கேட்டு பெறுவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

ஒன்பது பேரில் ஒருவருக்கு ஏதேனும் ஒரு வகை தொற்று நோய்

ஐசிஎம்ஆர் ஆய்வில் தகவல்

சென்னை, நவ.24: இந்தியர்களில் ஒன்பது பேரில் ஒருவர் ஏதேனும் ஒரு வகையான தொற்று நோயால் பாதிக்கப்பட்டு இருப்பதாக இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலின் ஆய்வில் தெரியவந்துள்ளது.

ஐ.சி.எம்.ஆர் அவப்போது பல்வேறு உடல் நலம் சார்ந்த ஆய்வுகள் மேற்கொண்டு, அதனை முடிவுகளை வெளியிட்டு வருகிறது. அந்த வகையில் ஐ.சி.எம்.ஆர்-யின் வைரஸ் ஆராய்ச்சி மற்றும் நோய் நிதல் ஆய்வகங்கள் மூலம் நாடு முழுவதும் தொற்று நோய் தொடர்பாக ஆய்வு நடத்தப்பட்டது.

இதில் 4.5 லட்சத்திற்கும் அதிகமான மக்கள்களின் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டன. இதில், சராசரியாக 11.1 சதவீத மாதிரிகளில் ஏதேனும் ஒரு நோய் தொற்றுக்கான காரணி (Pathogen) இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

குறிப்பாக, 2025ம் ஆண்டின் முதல் காலாண்டான ஜனவரி முதல் மார்ச் வரையிலான காலகட்டத்தில், பரிசோதிக்கப்பட்ட 2,28,856 மாதிரிகளில் 10.7 சதவீதம் (24,502) நேர்மறை முடிவுகள் கண்டறியப்பட்டன.

இந்த விகிதம், ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான இரண்டாவது காலாண்டில் 11.5 சதவீதம் (26,055 மாதிரிகளில்) ஆக உயர்ந்துள்ளது. இது, முதல் காலாண்டில் இருந்து 0.8 சதவீத புள்ளிகள் அதிகரிப்பைக் காட்டுகிறது.

இரண்டாம் காலாண்டில், தட்டம்மை (Measles), ரூபெல்லா (Rubella), சிக்குன்குனியா (Chikungunya), ரோட்டாவைரஸ் (Rotavirus) போன்ற நோய்த் தொற்றுகளும் அடங்கிய 191 நோய் வகைகள் ஆய்வு மூலம் தெரியவந்துள்ளது. தொற்று விகிதத்தில் ஏற்பட்டுள்ள இந்த அதிகரிப்பு சிறியதாகத் தோன்றினாலும், பருவமழை கால நோய்கள் மற்றும் எதிர்காலத்தில் உருவாகக்கூடிய தொற்றுகள் குறித்த எச்சரிக்கையாக இது பார்க்கப்பட வேண்டும் என்று ஆராய்ச்சியாளர் தெரிவித்துள்ளனர்.

மிக கனமழை அறிவிப்பு

முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க குமரி உட்பட 4 மாவட்ட கலெக்டர்களுக்கு தமிழக அரசு உத்தரவு

சென்னை, நவ.24: மிக கனமழை எச்சரிக்கையை தொடர்ந்து தூத்துக்குடி, தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய 4 மாட்ட கலெக்டர்களுக்கு முன் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்குமாறு தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இதுகுறித்து, தமிழக அரசு வெளியிட்ட அறிவிப்பு:

தெற்கு இலங்கைக்கு அருகிலுள்ள தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவும் மேலடுக்கு காற்று சுழற்சி காரணமாக தமிழ்நாடு முழுவதும் பரவலாக மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக, தென்காசி, திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய இடங்களில் மிக கனமழை பெய்யக் கூடும் என இந்திய வானிலை மையம் எச்சரித்துள்ளது.

கடலூர், அரியலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, சிவகங்கை, மதுரை, விருதுநகர், ராமநாதபுரம் மற்றும் அதை ஒட்டிய பகுதிகளில் மிதமானது முதல் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

மிக கனமழை மற்றும் கனமழை எச்சரிக்கை அளிக்கப்பட்டுள்ள நிலையில், தமிழ்நாடு அரசு உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு தொடர்புடைய மாவட்ட ஆட்சியர்களை அறிவுறுத்தியுள்ளது. மேலும், தமிழ்நாடு பேரிடர் மீட்பு படையின் இரண்டு அணியினர் தூத்துக்குடி மாவட்டத்திலும், ஒரு அணி திருநெல்வேலி மாவட்டத்திலும் மீட்பு மற்றும் நிவாரண பணிக்காக முன்னெச்சரிக்கையாக நிலை நிறுத்தப்பட்டுள்ளனர். கனமழை எச்சரிக்கை வரப்பெற்றுள்ளதால், மாநில அவசர கால செயல்பாட்டு மையம் மூலம் நிலைமை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம்
(தமிழ்நாடு அரசு சார்பு நிறுவனம்) (AN ISO 9001-2015 CERTIFIED COMPANY)
தெற்கு சரகம்
எண்.1, ஆய்வாளர் குடியிருப்பு, த.சி.கா வீடு அணி வளாகம், புதுநத்தம் சாலை, மதுரை - 625014.
மின் அஞ்சல்: spndengrsc.tnphcl@tn.gov.in தொலைபேசி எண்: 0452-2903019

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண்.: 36/2025-2026 நாள்: 21.11.2025

வேலையின் பெயர்	வேலையின் தோராய மதிப்பு (இலட்சத்தில்) (2025-2026)
1) பெரம்பலூர் மாவட்டம் பெரம்பலூர் ஆயுதப்படை காவல் ஆளிநர்களுக்காக 50 படுக்கை வசதிகள் கொண்ட காவலர் தங்குமிடம் கட்டுதல்	ரூ.155.51+ GST @ 18%
2) திருவாரூர் மாவட்டம் திருவாரூர் ஆயுதப்படை காவல் ஆளிநர்களுக்காக 50 படுக்கை வசதிகள் கொண்ட காவலர் தங்குமிடம் கட்டுதல்	ரூ.147.37 + GST @ 18%
3) மதுரை மாநகர் மதுரை ஆயுதப்படை காவல் ஆளிநர்களுக்காக 50 படுக்கை வசதிகள் கொண்ட காவலர் தங்குமிடம் கட்டுதல்	ரூ.139.27 + GST @ 18%

1) ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு https://tntenders.gov.in அணுகவும்
2) ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்கும் காலம் மற்றும் சமர்ப்பிக்கப்படுவதற்கான நாளும் மற்றும் நேரமும் : 16.12.2025 நண்பகல் 12.00 மணி முதல் 24.12.2025 மாலை 06.00 மணி வரை
3) ஒப்பந்தப்புள்ளி இணையதளத்தில் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 26.12.2025 காலை 11.15 மணிக்கு
4) விரிவான ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கையினை www.tnphc.com & www.tnpolice.gov.in ஆகிய இணையதளங்களில் காணலாம்

செ.எ.தொ இ/6274/ஒப்பந்தப்புள்ளி/2025
கண்காணிப்புப் பொறியாளர், தெற்கு சரகம் / த.நா.கா.வீ.வ.க.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த செயல்முறை

தமிழகத்தில் இன்று முதல் தேர்தல் அதிகாரிகள் கள ஆய்வு

அர்ச்சனா பட்நாயக் தகவல்

சென்னை, நவ.24: வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த செயல்முறையையொட்டி தமிழகத்தில் இன்று முதல் தேர்தல் அதிகாரிகள் கள ஆய்வு மேற்கொள்ள உள்ளதாக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

2026ம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தின் ஒரு பகுதியாக, தமிழ்நாடு முழுவதும் சிறப்பு தீவிர திருத்த செயல்பாடுகளை மதிப்பாய்வு செய்ய இந்திய தேர்தல் ஆணைய அதிகாரிகள் தமிழகத்திற்கு வருகை தர உள்ளனர்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் ஊடகப் பிரிவைச் சேர்ந்த பவன், துணை இயக்குநர் மற்றும் தேவன்ஷ் திவாரி ஆகியோர் நவம்பர் இன்று முதல் வரும் 26ம் தேதி வரை சென்னையில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் கட்டம் குறித்த ஊடக ஒருங்கிணைப்பு மற்றும் வாக்காளர் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மதிப்பாய்வு செய்வார்கள்.

அதைத் தொடர்ந்து, அவர்கள் கள அளவிலான ஆய்வுகளை மேற்கொள்வார்கள். கூடுதலாக, இந்திய தேர்தல் ஆணையத்தின் இயக்குனர் கிருஷ்ண குமார் திவாரி, இச்சிறப்பு தீவிர திருத்த செயல்பாடுகளின் முன்னேற்றம் குறித்து, குறிப்பாக மாவட்ட அளவில் சம்பந்தப்பட்ட வாக்கு சாவடி நிலை அலுவலர்கள் மூலம் கணக்கீட்டு படிவங்கள் விநியோகம் மற்றும் அதன் டிஜிட்டல் முறை உள்ளீடு குறித்து மதிப்பாய்வு செய்வதற்காக கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களுக்கு வருகை தருவார்.

இதேபோல் மதுசூதன் குப்தா, செயலர் சென்னை மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களுக்குச் சென்று சிறப்பு தீவிர திருத்தம் பற்றி ஆய்வு செய்வார்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் காலியாக உள்ள 48 மருத்துவ இடங்கள்

என்எம்சி அனுமதி பெற்று நிரப்ப நடவடிக்கை

சென்னை, நவ.24: தமிழ்நாட்டில் எம்.பி.பி.எஸ், பி.டி.எஸ் படிப்புகளுக்கான 4 கட்ட கலந்தாய்வு நிறைவடைந்த நிலையில், இன்னும் 48 இடங்கள் நிரம்பாமல் உள்ளதால் அவற்றை நிரப்ப தேசிய மருத்துவ ஆணையத்திடம் மாநில மருத்துவ கல்வி இயக்ககம் அனுமதி கேட்டுள்ளது.

2025-26ம் கல்வியாண்டுக்கான அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் வழங்கப்படும் எம்பிபிஎஸ் மற்றும் பிடிஎஸ் படிப்புகளுக்கு நீட் தேர்வு மதிப்பெண்கள் அடிப்படையில் தரவரிசை பட்டியல் கடந்த ஜூலை மாதம் வெளியானது. பொது தரவரிசை மற்றும் அரசு பள்ளி மாணவர்களுக்கான 7.5% ஒதுக்கீடு தரவரிசை பட்டியல் என தனித்தனியாக வெளியானது. சுமார் 72,000 மேற்பட்டவர்கள் மருத்துவப் படிப்புகளுக்கு விண்ணப்பித்து இருந்தனர். தமிழ்நாட்டில் அரசு மருத்துவம் மற்றும் பல் மருத்துவக் கல்லூரிகளில் உள்ள 15 சதவீத இடங்கள் அகில இந்திய கலந்தாய்வு மூலமும், மீதமுள்ள 85 சதவீத இடங்களும், தனியார் கல்லூரிகளில் உள்ள அரசு ஒதுக்கீடு மற்றும் மேனேஜ்மெண்ட் இடங்களுக்கு தமிழ்நாடு அரசின் மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநரகம் மூலம் கலந்தாய்வு நடத்தப்பட்டு நிரப்பப்படுகிறது.

அதன்படி, இந்த கல்வி ஆண்டிற்கான கலந்தாய்வு ஜூலை இறுதி தொடங்கியது. இதில் எம்பிபிஎஸ் படிப்பிற்கு அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் தனியார் கல்லூரி அரசு ஒதுக்கீடு இடங்களில் 6,600 இடங்களும், தனியார் கல்லூரி மேனேஜ்மெண்ட் கோட்டாவில் 1,144 இடங்களும் இருந்தன. அதே போன்று, பிடிஎஸ் படிப்பிற்கு அரசு கோட்டாவில் 1,583 இடங்களும், தனியார் கல்லூரி கோட்டாவில் 515 இடங்கள் இருந்தன.

அரசு பள்ளி மாணவர்களுக்கான 7.5 சதவீத கோட்டாவில் 495 எம்பிபிஎஸ் மற்றும் 119 பிடிஎஸ் இடங்கள் இருந்தன. இவை தவிர என்.ஆர்.ஐ கோட்டாவில் மொத்தம் 600 மேற்பட்ட இடங்கள் இருந்தன.

ஜூலை இறுதியில் தொடங்கிய பொது கலந்தாய்வு https://tnmedicalselection.net/ என்ற இணையதளத்தில் ஆன்லைன் வழியாக தொடர்ந்து 4 சுற்றுகளாக நடைபெற்றது. மேலும், ஜூலை 30ம் தேதி 7.5 சதவீத ஒதுக்கீடு மற்றும் சிறப்பு பிரிவினருக்கான கலந்தாய்வு ஒரே கட்டமாக நடைபெற்றது

4 சுற்றுகள் முடிந்த நிலையிலும், சென்னை மற்றும் கடலூர் அரசு பல் மருத்துவக் கல்லூரியில் 3 பிடிஎஸ் இடங்களும், தனியார் மருத்துவக் கல்லூரிகளில் அரசு மற்றும் மேனேஜ்மெண்ட் கோட்டா சேர்த்து மொத்தம் 48 இடங்கள் காலியாக உள்ளன. இதில் 7.5 சதவீத இடஒதுக்கீட்டில் 1 பிடிஎஸ் இடம் காலியாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தமிழ்நாட்டில் நிரப்பப்படாமல் இருக்கும் 48 மருத்துவ இடங்களை மீண்டும் கலந்தாய்வு நடத்தி நிரப்ப, தேசிய மருத்துவ ஆணையத்திடம் அனுமதி கேட்கப்பட்டுள்ளது. அனுமதி கிடைக்கும் நிலையில், இவ்விடங்களுக்கு ஆன்லைன் வழியாக கலந்தாய்வு நடத்தப்படலாம். மருத்துவப் படிப்பில் இதுவரை சேர முடியாதவர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தகொள்ள ஏதுவாக அமையும்.

ஊரக திறனாய்வு தேர்வுக்கு இன்று ஹால்டிக்கெட்

நாகர்கோவில், நவ.24: தமிழ்நாடு ஊரக திறனாய்வு தேர்வுக்கு இன்று (24ம் தேதி) முதல் ஹால்டிக்கெட் வழங்கப்பட இருக்கிறது.

தமிழ்நாடு ஊரகத் திறனாய்வுத் தேர்வு (டிரஸ்ட்) வரும் வரும் 29ம் தேதி (சனிக்கிழமை) அன்று நடைபெறவுள்ளது. இத்தேர்விற்கு வருகை புரியும் மாணவர்களின் பெயர்பட்டியலுடன் கூடிய வருகை தாள்கள், தேர்வு மையம் வாரியாக www.dee.tn.gov.in என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. தேர்வு மையமாக செயல்படும் பள்ளியின் யூசர் ஐடி, பாஸ்வேர்டு பயன்படுத்தி 24ம்தேதி பிற்பகல் முதல் இதனை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்று, அரசு தேர்வுகள் இயக்குநரகம் தெரிவித்துள்ளது.

மேலும் தேர்வுக்கூட நுழைவு சீட்டுகளை இன்று (24ம் தேதி) பிற்பகல் முதல் www.dee.tn.gov.in என்ற இணையதளத்தில், பள்ளி தலைமையாசிரியர்கள் தங்கள் பள்ளியின் யூசர் ஐடி, பாஸ்வேர்டை பயன்படுத்தி பதிவிறக்கம் செய்யலாம். 'டிரஸ்ட்' தேர்விற்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கு, பள்ளி தலைமையாசிரியர்கள் பதிவிறக்கம் செய்யப்பட்ட நுழைவு சீட்டுகளில் கையொப்பமிட்டு, பள்ளி முத்திரையுடன் வழங்க வேண்டும். தேர்வு மைய விபரங்களை மாணவர்களுக்கு தெளிவாக தெரிவிக்கவும் தேர்வுகள் இயக்குநரகத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் தேர்வர்களின் தேர்வு கூட நுழைவு சீட்டுகளில் பெயர், பிறந்த தேதி ஆகியவற்றில் திருத்தம் ஏதும் இருப்பின், சிவப்பு மையினால் பிழையினை சுழித்து சரியான திருத்தத்தை குறிப்பிட்டு, அப்பள்ளி தலைமை ஆசிரியர் சான்றொப்பம் மற்றும் முத்திரையிட வேண்டும் என்றும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

श्रम एवं रोजगार मंत्रालय
भारत सरकार
MINISTRY OF LABOUR & EMPLOYMENT
GOVERNMENT OF INDIA

ஒரு புதிய சகாப்தம்

கிக் மற்றும் ஆன்லைன் தொழிலாளர்களுக்காக

"இந்த நாடு தனது பணியாளர்களை பற்றி பெருமை கொள்கிறது. ஷ்ரமேவ் ஜெயதே!"
–பிரதமர், நரேந்திர மோடி

தொழிலாளர் குறியீடுகள் நான்கு
செயல்படுத்தப்பட்டிருக்கின்றன

கிக் மற்றும் ஆன்லைன் டெலிவரி தொழிலாளர்களுக்காக
மோடி அரசாங்கத்தின் உத்தரவாதம்

- கிக் மற்றும் ஆன்லைன் டெலிவரி தொழிலாளர்கள் மற்றும் ஆன்லைன் டெலிவரி நிறுவனங்கள் முதல் முறையாக முறைப்படி வரையறுக்கப்படுகிறார்கள்.
- சமூக பாதுகாப்புக்கான நிதி ஒதுக்கீடு: நிறுவனங்களின் ஆண்டு வருமானத்தில் 1-2 % பங்களிப்பு இருக்க வேண்டும், தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் தொகையில் 5 % தொகையை பிடித்தம் செய்து நிதியம் உருவாக்க வேண்டும்.
- வாழ்க்கை மற்றும் இயலாமைக்கான சமூக பாதுகாப்பு திட்டங்கள், விபத்து இன்சூரன்ஸ், மருத்துவம் மற்றும் மகப்பேறு பலன்கள், முதியோர் பாதுகாப்பு உள்பட.
- ஆதார் இணைக்கப்பட்ட உலகளாவிய கணக்கு எண், மாநிலங்கள் முழுவதும் பெயர்வுத்திறன் மற்றும் பலன்களை தடையின்றி வழங்குவதை உறுதி செய்யும்.

CBC 23101/13/0004/2526

தற்சார்பு இந்தியாவிற்கான தொழிலாளர் சீர்திருத்தங்கள்

GRIHUM HOUSING FINANCE

க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 6வது தளம், B கட்டடம், கங்கா டீலுனோ, லோஹெகோன், புனே, மகாராஷ்டிரா 411014. கிளை அலுவலகம் அலகு: எண் 1510, 2ஆவது தளம், ஸ்ரீ காம்பிளக்ஸ், திருச்சி சாலை, கோயம்புத்தூர், தமிழ்நாடு-641018.

மின்-ஏலம்- விற்பனை அறிவிப்பு
சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சட்டம்) மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8&9 கீழ் அசையா சொத்துகளின் மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு.

இங்கே உள்ள அறிவிப்பின் மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர் / உப-கடன்தாரர் / அடமானதாரர்(கள்) / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் (இதற்குப்பிறகு "கடனீட்டு கடனீந்தோர்" என்று குட்டத்தின்படி குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியிடம், பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், பிரிவு 13(12)-ன் படியும், கடனீட்டு சொத்துகளின் உரிமை (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 & 9-ன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி கவனத்தில் செய்துள்ளார்.

கடனீட்டு சொத்துகள் அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, அதே அடிப்படையில் 26.12.2025 அன்று மின்-ஏலம் மூலமாக விற்பனை செய்யப்படும். இதன்மூலம் பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்-ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள இணைப்பில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்-ஏலம் நடைபெறும். விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்துகொள்ள GHFL's/ கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com-ஐ பார்வையிடவும்.

வ. எண்.	முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A)	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவைத்தொகை (B)	சுவாதீன தன்மை (C)	சொத்தின் விவரம் (D)	நிர்ணய விலை (E)	முன்வைப்புத் தொகை (நிர்ணய விலையில் 10%)(F)	முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி (G)	ஏல உயர்வுத் தொகை (H)	சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I)	ஏலத் தேதி மற்றும் நேரம் (J)	வெற்றி விலைக்கான / நிர்ணய வழக்கான வெற்றுத் ஏற்றும் (K)
5	கடன் எண்: LAP05612000000005054097 & HL00561200000005051268 ஐசக் T (கடன்தாரர்), பிரியா வர்கீஸ் (உப கடன்தாரர்) சாரவி அல்போன்ஸ் (உப கடன்தாரர்)	அறிவிப்பு தேதி: 08.08.2025 மொத்த நிலுவை: 08.08.2025 தேதிப்படி செலுத்த வேண்டிய தொகை ரூ.534635/- (ரூபாய் ஐந்து லட்சத்து முப்பத்து நான்காயிரத்து அறுநூற்று முப்பத்தைந்து மட்டும்) மற்றும் ரூ.768179/- (ரூபாய் ஏழு லட்சத்து அறுபத்தெட்டாயிரத்து நூற்று எழுபத்தொன்பது மட்டும்) மற்றும் பணம் செலுத்தும் வரையிலான ஆண்டு வட்டி @16.35% & @16.60% உட்பட.	கையக	அனைத்து துண்டு மற்றும் பகுதிகள் கொண்ட நிலம் மற்றும் கட்டடம், கதவு எண் 7/38c2, கடையல் பேரூராட்சி, பரப்பளவு 5.00 சென்ட் அதாவது 202.35 சதுர மீட்டர் கொண்ட நிலம், அமைவிடம் மறுசர்வே எண் 695/2a1, தொடர்புடைய பழைய சர்வே எண் 2860, களியல் கிராமம், தற்போது கடையல் கிராமம், விளவங்கோடு தாலுகா, அருமனை சார்பதிவாளர் அலுவலக வட்டாரம், மாவட்டாட்சியர் பதிவு மாவட்டம், கன்னியாகுமரி மாவட்டம், எல்லைகள்: கிழக்கு: வழிப்பாதை, தெற்கு: ராயப்பன் அவர்களின் சொத்து, மேற்கு: அரிஷ் அவர்களின் சொத்து, வடக்கு: ரோமாஸ் அவர்களின் சொத்து.	ரூ.1233575/- (ரூபாய் பன்னிரண்டு லட்சத்து முப்பத்து மூன்றாயிரத்து ஐந்நூற்று எழுபத்தைந்து மட்டும்)	ரூ.123357.5/- (ரூபாய் ஒரு லட்சத்து இருபத்து மூன்றாயிரத்து முந்நூற்று ஐம்பத்தேழு மற்றும் ஐந்து பைசா மட்டும்)	24.12.2025 மாலை 5 மணிக்கு முன்பு	10,000/-	19.12.2025 (முற்பகல் 11 முதல் மாலை 4 மணி வரை)	26.12.2025 (முற்பகல் 11 முதல் பிற்பகல் 2 மணி வரை)	ஏதுமில்லை

ஆர்வமுள்ள ஏலதாரர்கள்/ கொள்முதலாளர்கள் ஏலப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு முன்பாக ஏலச் சொத்துகள் தொடர்பான விவரங்கள் மற்றும் கூடுதல் கட்டணங்கள், வில்லங்கங்கள், மூன்றாம் நபர் கோருரிமைகள் போன்ற சொத்து தொடர்பான விவரங்களை தெரிந்துகொள்ள அருகில் உள்ள கிளைக்குச் சென்றோ அல்லது தாங்களாகவே எல்லா அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தெரிந்து கொண்டு திருப்தியுற வேண்டும். சொத்து தொடர்பான சொத்துவரி, மின்சாரம்/ வேண்டிய கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் உள்ப. எந்தவிதமான செலவுகளையும் வெற்றிகரமான ஏலதாரரே ஏற்க வேண்டும். ஆர்வமுள்ள ஏலதாரர்கள் பயனாளர் அடையாள முகவரி, கடவுச்சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் C1 இந்தியா பிரைவேட் லிட்., முகவரி: மனை எண்-68, 3ஆவது தளம், குர்கான், ஹரியானா-122003, உதவி எண்: 7291981124,25,26 உதவும் மின்னஞ்சல் முகவரி: Support@bankeauctions.com மூலமாகவோ, தொடர்பு நபர்: தரணி P, மின்னஞ்சல் முகவரி: dharani.p@c1india.com, தொடர்பு எண். 9948182222 மூலமாகவோ தொடர்கொண்டு அவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். அதன்பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். மின்-ஏலம் செயல்பாடு மீதான ஆன்லைன் பயிற்சியை அவர்களிடம் இருந்தே பெற வேண்டும். ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் அவர்களுடைய ஏல முன்வைப்புத் தொகையை (EMD) NEFT/RTGS/DD மூலமாக "க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்" வங்கிக் கணக்கில், ICICI BANK LTD, கணக்கு எண் – 091551000028 மற்றும் IFSC எண் – ICIC0000915, ICICI வங்கி லிட்., பஞ்சாலில் டெக் பார்க், கணபதி சௌக் அருகில், 43/44 மிலன் நகர் 411014 என்ற கிளையில் செலுத்தத்தக்க விதமாக ஏதேனும் தேசிய வங்கியினை அல்லது அட்டவணை வங்கியினை 24.12.2025 தேதி அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ செலுத்த வேண்டும். மேலும் https://www.bankeauctions.com இணையதளம் வழியே தங்கள் வாக்கின் அடையாள முகவரி மற்றும் கடவுச்சொல் மூலம் பயனர் முன்னதாகவே பதிவுசெய்து கட்டணமில்லா மின்-ஏல பயிற்சி பெற பயனாளர் அடையாள முகவரி, கடவுச்சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். அதன்பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். மேலும் கையொப்பி எண். +91 9567626050 மின்னஞ்சல் முகவரி rahul.r1@grihumhousing.com-ல் தொடர்பு கொள்ள வேண்டும். மின்-ஏலத்தில் பங்கேற்பதற்கான விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்துகொள்ள https://www.bankeauctions.com & www.grihumhousing.com-ஐ பார்வையிடவும்.

கடனீட்டு சொத்துகளின் உரிமை (அமலாக்கம்) சட்டம்-2002-ன் விதி 8(6)-ன் கீழ் கடன்தாரர்/ உப கடன்தாரர் / அடமானதாரர்(கள்)/ ஜாமீன்தாரர்களுக்கு வழங்கப்படும் இந்த அறிவிப்பானது 30 நாள்கள் (முப்பது) அறிவிப்பு என்று கருதத்தக்கதாகும்.

உள்ளூர் மொழி வெளியீட்டில் அல்லது ஆங்கில செய்தித்தாள் வெளியீட்டில் உள்ளடக்கங்களில் ஏதேனும் வித்தியாசம் இருந்தால் பிசினஸ் ஸ்டாண்டர்டு ஆங்கில செய்தித்தாளில் வெளியிடப்பட்ட உள்ளடக்கமே ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும்.

நாள்: 24.11.2025, இடம்: தமிழ்நாடு